
அறத்தான் வருவதே இன்பம்

# தமிழ் அறம்



உள்ளே...


ஆசிரியர் தலையங்கம் .................................. 1

நெஞ்சமே அஞ்சாதே நீ!

காகிதம் பேசும்.......................................................2

இல்லறம் இனிக்க...............................................3

மக்கள் சக்தி இயக்கம் .................................... 5

கவிதைகள். ........................................................... 6



சிந்தனை 8 செயல் 6 ஆசிரியர் மரு.த.இராசலிங்கம் மே 2026

## பண்புள்ள தமிழ்நெஞ்சங்களுக்கு வணக்கம்!

### மாற்றம் தருமா புதிய அரசு?

தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பு "மாற்றம், மாற்றம்" என்ற கூக்குரல் எங்கும் ஒலித்தது. அது என்ன மாற்றம் என்ற புரிதல் இல்லாமலே பெரும்பான்மையான மக்களும் வாக்களித்து எப்படியோ ஒரு புதிய அரசும் அமைந்துவிட்டது. புதிய அரசுக்கு முதலில் நாம் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வோம்.

ஊழலற்ற, நேர்மையான ஆட்சி என்பதுதான் மக்கள் விரும்பிய மாற்றமாக இருக்க வேண்டும் என நாம் நம்புவோம். திராவிடக் கட்சிகளால் வெறுப்படைந்த மக்கள் அவற்றுக்கு மாற்றாக வேறொரு கட்சியை ஆதரிக்க எண்ணியிருந்தால், களத்தில் நீண்டகாலம் அரசியல் செய்கின்ற, திராவிடக் கட்சிகளுக்கு எதிரான கொள்கைகளைக் கொண்டிருக்கும் பா.ஜ.க அல்லது நாம்தமிழர் கட்சியைத் தேர்ந்தெடுத்திருக்க வேண்டும். ஆனால் அவ்விரு கட்சிகளின் வாக்கு சதவிகிதம் குறைந்திருப்பதை நாம் கவனத்தில் கொள்ளும்போது, நமக்குத் தோன்றுவதெல்லாம், சினிமா மோகமும், திரையில் பேசுகின்ற தீப்பொறி வசனங்களும்தான் ஒரு மாயையை உருவாக்கி, அது கண்மூடித்தனமான ஒரு நம்பிக்கையாக வளர்ந்து, வேட்பாளர் முகம், பெயர் தெரியாத நிலையிலும் ஆட்சிக் கட்டிலில் அமர வைத்துள்ளது. அந்த வகையில் பார்க்கும் போது இது அரசியலில் ஒரு மாற்றம்தான். இந்த இடத்தில் மகாத்மா காந்தி சொன்னது நினைவுக்கு வருகின்றது. "எப்படியோ தேர்ந்தெடுக்கப்படும் ஆயிரம் பேர்களை விட, அறிவும், அனுபவமும் உள்ள ஐந்நாறு பேர்களே ஜனநாயகத்துக்குப் பாதுகாப்பானவர்கள்" என்று சத்திய சோதனையில் எழுதுகிறார் காந்தி.

### புதிய அரசு என்ன செய்ய வேண்டும் ?

1.தனிப்பெரும்பான்மை இல்லைதான். கூட்டணிக் கட்சிகளை அனுசரித்துச் செல்ல வேண்டும். அரவணைத்துச் செல்ல வேண்டும். தூயசக்தி என்று பேசிபேசிதான் ஆட்சி அதிகாரம் வந்துள்ளது. அது ஊழல்சக்தியாக மாறிவிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

2.தெரிந்தோ, தெரியாமலோ நிறைவேற்ற முடியாத பல வாக்குறுதிகளைக் கொடுத்தாகி விட்டது. ஆனால், அதுபற்றிக் கவலைப்படத் தேவையில்லை. மக்கள் விரைவில் அவற்றை மறந்துவிடுவார்கள்.

3.ஏற்கனவே ஆட்சி செய்த அரசுகள் மக்கள் நலத்திட்டங்களைப் போதுமான அளவுக்கு செய்து விட்டன. எனவே, மக்கள் நலத்திட்டங்கள் என்று புதிதாக எதையும் தொடங்கி மக்கள் வரிப் பணத்தை வீணாக்க வேண்டியதில்லை.

4.குடிமக்கள் அனைவரும் ஓர் அரசிடம் பெரிதும் எதிர்பார்ப்பது - அரசு அலுவலகங்களில் இலஞ்சம் இல்லாமல் காரியம் நடைபெற வேண்டும் என்பது. அதை புதிய அரசு உறுதி செய்ய வேண்டும். மேலும் அரசு அலுவலகங்களில் மக்களுக்கான சேவைகளில் அதிகாரிகளும், பணியாளர்களும் காட்டுகின்ற மெத்தனப்போக்கு களையப்பட வேண்டும்.

5.சட்டம்- ஒழுங்கு பராமரிப்பில் தீவிர கவனம் செலுத்த வேண்டும். போக்குவரத்துக்கு இடையூறாக, சாலையில் செல்வோரை அச்சமூட்டும் வகையில் வாகனத்தை ஓட்டிச் செல்லும், பொது அமைதிக்கு ஊறு விளைவிக்கும் இளைஞர்களைக் கட்டுப்படுத்த வேண்டும்.

6.போதைப் பொருள் நடமாட்டத்தை தீவிரமாகக் கண்காணித்து ஒழிக்க வேண்டும்.

7.பொருளாதாரத்தை மேம்படுத்தும், வேலைவாய்ப்பை உருவாக்கும் ஆக்கப்பூர்வமானத் திட்டங்களைச் செயல்படுத்த வேண்டும்.

8.எந்தச் சூழ்நிலையிலும் மாநில உரிமைகள் காக்கப்பட வேண்டும்.

பொறுத்திருந்து பார்ப்போம்! .........அன்புடன் ஆசிரியர்



## நெஞ்சமே அஞ்சாதே நீ!

டாக்டர். எம்.எஸ்.உதயமூர்த்தி

நம் வாழ்க்கை பலவித சனாதனக் கட்டுப்பாடுகளால் முடக்கப்பட்டிருக்கிறது. பல விடயங்களைக் கேட்கவே பயப்படுகிறோம். சிந்திக்கவே பயப்படுகிறோம். எல்லாவற்றிலும் அர்த்தத்தைத் தேடி அலையாதீர்கள். எல்லாவற்றிற்கும் காரண காரியம் காட்டி வாழ. முயலாதீர்கள். வாழ்வில் நடக்கும் எல்லா சம்பவங்களுக்கும் சமாதானமும், காரணமும் தேடி அலையாதீர்கள்.

போதும் இந்தக் காரண காரிய வாழ்க்கை. சும்மா ஒருநாள் கால்போன வாக்கில் செல்லுங்கள். வானத்தை அண்ணாந்து நோக்குங்கள். அதன் அழகை வியந்துப் பாருங்கள். உங்கள் மனமும், உடலும் சுதந்திரமாகப் பறந்து திரியட்டும். அந்த விடுபட்ட உணர்ச்சி மனதுக்கும், உடலுக்கும் இதமானது. ஆக்க சக்திகள் நம் உள்ளே புக, இதைவிட வேறு வசதியான வாய்ப்பை உங்களுக்கு நீங்களே அளித்துக் கொள்ள முடியாது.

ஆல்பர்ட் ஐன்ஸ்டைன் வீட்டின் முன் ஓர் இசைக்கூட்டம் வந்து பாடுகிறது. அவர் உள்ளே போகிறார். தன் பெட்டியிலிருக்கும் வயலினை எடுத்துக்கொண்டு வந்து அந்தத் தெருப்பாடகர்களுடன் தானும் சேர்ந்து பாடுகிறார். இதற்கு ஏதேனும் காரணம் இருக்கிறதா?. ஏதாவது அர்த்தம் இருக்கிறதா?நெருக்கடி இல்லாத கட்டவிழ்ந்த இந்த நிலை நம் ஆயுட்காலத்தை அதிகப்படுத்தும். நம் புலன்களின் அறியும் சக்தியை அதிகப்படுத்தும்.



## காகிதம் பேசும்!

முனைவர்.லெ.பாஸ்கர்

வாசிக்கும் இனம், நாளடைவில் யோசிக்கும் குணம் கொண்ட சமூகமாக உருவாகும். புத்தக வாசிப்பு, தனி மனிதனைப் பதப்படுத்தி, பக்குவப்படுத்துகிறது. அறிவுசார்ந்த சிறந்த ஆளுமையாக வளர்வதற்கு அடித்தளமிடுகிறது. நம் அறிவுக்குப் புத்தகமே அடிப்படை சக்தியாக விளங்குகிறது. காகிதப் புத்தகம் படிப்பதற்கு மட்டுமல்ல, உறக்கம் கலைந்து விழிப்பதற்கும், இதயங்களைத் தூய்மைப்படுத்தவும், எழுச்சியையும், புரட்சியையும் விதைப்பதற்கும் ஆகும். ஆகவே, நூலின்றி அமையாது உலகு என்று அறிக.

காகிதம் பல வகைப்படும். அதிலே புத்தகக் காகிதமே சிறந்த தனி மனித ஆயுதமாகும். காகிதப் புரட்சி - நடந்ததையும் சொல்லும், நடக்க வேண்டியதையும் சொல்லும், நாம் நடத்த வேண்டியதையும் சொல்லும். கால் இரண்டு, நடக்கும் பாதையோ ஒன்று. கண் இரண்டு, காணும் பொருளோ ஒன்று. காது இரண்டு, கேட்கும் ஒலி ஒன்று, வாய் ஒன்றுதான்! ஆனால் பேசும் விதம் பலப்பல! புத்தகம் இவற்றையெல்லாம் வேறுபடுத்திக் காட்டி நம்மை வழி நடத்துகின்றது. புத்தக வாசிப்பில் தனிமனித முன்னேற்றம் மட்டுமன்றி, சமூக முன்னேற்ற அக்கறையும் அடங்கியுள்ளது. காகிதப் பூ மணக்காது! ஆனால் காகிதப் புத்தகம் மணப்பதோடு நம் மனதோடு பேசும். காகிதப் புத்தகத்தின் பேச்சை ஆழ்ந்து சிந்தித்துச் செயல்பட்டவர்களே உலகுக்கு வழிகாட்டியுள்ளார்கள். காகிதம் அவர்களோடு பேசிய பேச்சுகள்தான் அறிவியலாக, சமூக நீதியாக, சமத்துவமாக இன்றைக்கும் சமுதாயத்தில் மலர்ந்து மனித இனத்தை வழிநடத்திக் கொண்டிருப்பதைக் காணலாம்.

பேசும் காகிதத்தை நமதாக்குவோம்! மேலும் மேலும் உயர்வோம்!



.

சென்ற இதழ் தொடர்ச்சி....

## 2.விட்டுக்கொடுத்து வாழுங்கள்!

திருமணமாகி சில நாள்களே ஆகியிருந்தன. மனைவி தன் கணவனிடம், "கால் வலிக்கிறது, கொஞ்சம் பிடித்து விடுங்கள்" என்கிறாள். திருமணமான புதிதில் இதுவொன்றும் புதிதல்லவே! அவனும் மனைவியின் பாதங்களைப் பிடித்து விடுகிறான். அவனோ இலக்கிய ஆர்வலன். அவளின் அழகான சிவந்த பாதங்களைப் பார்த்தவுடன், அவனுக்கு சங்க இலக்கியப் பாடலில், தெருவில் ஆடுகின்ற விறலியரின் பாதங்களின் அழகினைப் புலவர் வர்ணித்துள்ளது நினைவுக்கு வருகிறது. அப்படியென்ன புலவர், விறலியரின் பாதங்களின் அழகுப் பற்றிக் கூறியிருக்கிறார் என்றால்..."ஓடி இளைத்து வருகின்ற நாயின் தொங்குகின்ற நாக்கைப் போன்ற சிவந்த பாதம்: என்று நாயின் நாக்கைப் பாதத்துக்கு உவமையாகக் கூறியிருக்கிறார். அவனும் அதை அப்படியே கூற... அவளும் இலக்கிய ஈடுபாடும், உவமையழகை ரசிக்கும் தேர்ச்சியும் கொண்டவள் என்றால், நாணத்தோடு புன்னகைப் பூத்திருப்பாள். இலக்கிய வாசனையே இல்லாதவள் என்றால்,..".நாயோடு ஒப்பிடுகிறாயே" என்று ஊடியிருப்பாள் அல்லது உதைத்திருப் பாள். எனவே, கணவன் மனைவிக்கிடையே அன்பை, காதலைப் பரிமாறிக் கொள்வதில்கூட ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். அதைப் புரிந்து கொண்டு நடக்க வேண்டும். முரண்பாடுகளைத் தவிர்க்க வேண்டும்.

கணவனோ மனைவியோ அவரவர் விருப்பம் - கொள்கைதான் மேலானது என்றும் வாதாடக் கூடாது. ஒன்றை ஏற்றுக் கொண்டு அதைப் போற்றும், பின்பற்றும் பழக்கம் தானாக, சுதந்திரமாக ஏற்பட வேண்டும்.

நம் நாட்டில் மதம் சார்ந்த சடங்குகள், வழிபாட்டு முறைகள், குடும்பம் சார்ந்த நடைமுறைகள் பலவிதமாக உள்ளன. ஒரே சாதியில் கூட, சில முறைகள் ஊருக்கு ஊர் வேறுபடுகின்றன. இதற்கெல்லாம் முன்னுரிமை கொடுத்து, ஒருவரின் குடும்ப முறைகள்தான் மேலானவை என்றும், அவற்றையேப் பின்பற்ற வேண்டும் என்றும் வற்புறுத்தல் ஆகாது. மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு எந்த வகையிலும் உதவாத இதுபோன்ற நடைமுறைகளை வலியுறுத்துவதை தவிர்த்து, விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டும். சடங்குகளும் சம்பிரதாயங்களும் இனிமையான இல்லறத்துக்கு குறுக்கே நிற்கக் கூடாது. ஒரு திருமண வீட்டில் நான்குமுக குத்துவிளக்கு ஏற்றுவதா? ஐந்துமுக குத்துவிளக்கு ஏற்றுவதா? என்று மணமகன் வீட்டாரும், மணமகள் வீட்டாரும் சண்டை போட்டுக் கொண்டார்கள். எத்தனை முகமாக இருந்தால் என்ன? விளக்கு எரிய வேண்டும். அவ்வளவுதானே? இதுபோன்ற அற்பத்தனமானக் காரியங்களில் கவனத்தைச் செலுத்தி நம் சக்தியை வீணாக்காமல் பெருந்தன்மையோடு விட்டுக்கொடுத்து வாழப் பழகிக் கொள்ள வேண்டும். அதுதான் இனிமையான இல்லறத்துக்கு அழகு.

....................தொடர்ந்து இல்லறம் இனிக்கும்

**தமிழ் அறம் மின்னிதழ்**
**வெளியிடுபவர் : மருத்துவர்.த.இராசலிங்கம். MBBS.,Dip.Diab**
**4/16, இராம் நகர். தூத்துக்குடி.**

# சங்க இலக்கியத்தில் உவமையழகு
# கலித்தொகை -- நெய்தற்கலி

இருள் எங்கும் படரத் தொடங்கிவிட்டது. கடலுக்கு மீன் பிடிக்கச் சென்ற தன் கணவன் இன்னமும் வீடு திரும்பவில்லையே என்று ஏங்கித் தவிக்கிறாள் மனைவி. அவளின் ஏக்கத்தை உவமையழகுடன் புலவர் எடுத்துக்காட்டுவது, இன்றைய அரசியல் சூழலுக்கும், நகர்வுக்கும் பொருத்தமாகத் தோன்றுவது, வியப்பாக உள்ளது.

அதாவது, நல்ல நெறிகளை நாட்டிலே நிறுவி, ஆட்சி செய்த மன்னன் தோல்வியுற்றப் பிறகு, அந்த நாட்டிலே திறமையற்ற ஒருவன் ஆட்சிக்கு வருகிறான். அவன் சொன்னதுபோல் அவனால் நல்லறத்தைப் பேண முடியவில்லை, அதனால் எங்கும் தீய செயல்களே அரங்கேறுகின்றன. நாட்டு மக்கள் பல இன்னல்களை அனுபவிக்கின்றனர். அதனால் அவர்கள் பழைய மன்னனின் ஆட்சியை நினைத்து ஏங்குகின்றனர்.
மக்களின் ஏக்கத்தை, இருள் வந்து வருத்தும் தலைவியின் ஏக்கமாகப் பார்க்கிறார் புலவர்.

**நல் அற நெறி நிறீஇ உலகு ஆண்ட அரசன் பின்,**
**அல்லது மலைந்திருந்து அற நெறி நிறுக்கல்லா**
**மெல்லியான் பருவம் போல், மயங்கு இருள் தலை வர.....**

தலைவியைத் தலைவன் திருமணம் செய்து கொள்வது, காலம் கடந்து கொண்டே செல்கிறது. எப்பொழுது திருமணம் நடக்கும் எனத் தலைவி ஏங்குகிறாள். அவளது ஏக்கத்தை தோழி, தலைவனிடம் கூறுவதாக அமைந்துள்ள உவமையழகுதான் எவ்வளவு சிறப்பாக உள்ளது பாருங்கள். ஒருவன் நோயால் வாடுகிறான். அந்நோயைத் தீர்க்கும் மருந்தையும் அதன் திறத்தையும் அறிந்த மருத்துவனிடம் சென்று மருந்து கேட்டு இறைஞ்சுகிறான். அந்த மருத்துவனோ மருந்து கொடுக்காமல் காலதாமதம் செய்கிறான். அது எத்தகைய கொடுமை யானது. அதுபோல் உன்பால் தலைவி கொண்டுள்ள காதலுக்கு திருமணம்தான் மருந்து என்பதை அறிந்திருந்தும் நீ காலதாமதம் செய்வது கொடுமையல்லவா என்று தோழி, தலைவனைக் கடிந்துரைத்து, விரைவில் திருமணம் செய்து கொள் என்று கூறுகின்ற நயத்தில் உவமையழகு மேலோங்கி நிற்பதைக் காண்கின்றோம்.

**வருந்திய செல்லல் தீர்த்த திறன் அறி ஒருவன்**
**மருந்து அறை கோடலின் கொடிதே, யாழ நின்**
**அருந்தியோர் நெஞ்சம் அழிந்து உக விடினே.**

வெறுமனே சுவைத்து மகிழ்வதற்காக மட்டுமன்றி, உவமையழகிலும் அறத்தைப் பொதிந்து வைத்திருப்பதே தமிழ் இலக்கியத்தின் தனிச் சிறப்பாகும்.

............உவமையழகு தொடரும்.

மரு. த.இராசலிங்கம்



## நூறு முறை குருதிக்கொடை வழங்கியவருக்குப் பாராட்டு!

திருச்சி மாவட்டம் முசிறியை அடுத்துள்ள **தண்டலை** கிராமத்தைச் சேர்ந்தவர். **திரு.கண்ணன்.** சமுதாய நலனில் அக்கறை கொண்ட இவர் இதுவரை நூறு முறை இரத்த தானம் வழங்கியுள்ளார். அவரது அளப்பரிய பணியைப் பாராட்டும் விதமாக 17.05.26 அன்று திருச்சியில் நடைபெற்ற மக்கள் சக்தி இயக்கத்தின் மாநிலத் துணைச்செயலாளர், பண்பாளர், **இரா.இளங்கோ** அவர்களின் மகள் திருமண நிகழ்வின்போது, மாநிலத் தலைவர். **மருத்துவர்.த.இராசலிங்கம்** மற்றும் மாநிலப் பொருளாளர். **கே.சி.நீலமேகம்** முன்னிலையில் மாநிலப் பொதுச்செயலாளர் **முனைவர். தஞ்சை பாஸ்கர்** , பயனாடை அணிவித்து பாராட்டுச் சான்றிதழும், புத்தகமும் வழங்கி வாழ்த்தினார். ஒரு முன்மாதிரியான அந்த நிகழ்வில் இயக்த்தின் தூத்துக்குடி மாவட்டச் செயலாளர். **வீ.கந்தசாமி,** தஞ்சை மாவட்டச் செயலாளர் **முனைவர்.முருகானந்தம்**, மற்றும் இயக்க நிருவாகிகளுடன் மணமக்கள் குடும்பத்தார்களும் கலந்து கொண்டு சிறப்பு சேர்த்தனர்.

மணமக்கள் எல்லா வளமும் பெற்று, இனிய இல்லறம் காண தமிழ் அறம் சார்பாக வாழ்த்துகின்றோம்.

## *மே 29 மக்கள் சக்தி இயக்க தினம்*

தமிழர்தம் அறிவுக்கும், திறனுக்கும் ஏற்ற உன்னதமான தமிழ்ச் சமுதாயத்தைப் போற்றிப் பாதுகாப்போம் என்ற இலட்சியத்தோடு சிந்தனையாளர். **டாக்டர். எம்.எஸ். உதயமூர்த்தி** அவர்களால் உருவாக்கப்பட்ட இயக்கம். மக்கள் சக்தி இயக்கம்.

சாதி, மதம், கட்சி பாகுபாடற்ற ஒரே இயக்கம் மக்கள் சக்தி இயக்கம். நாட்டு நலனில் அக்கறை கொண்டு, தன்னலமற்ற தொண்டாற்றி வரும் உண்மையான தூயசக்தி மக்கள் சக்தி இயக்கம்தான்!

ஒவ்வொரு மனிதனும் வாழ்வில் நல்ல நெறிகளைக் கடைப்பிடிக்க வேண்டும், உழைப்பின் மீது நம்பிக்கை வைத்து நேர்மையாகத் தொழில் செய்து பொருளீட்ட வேண்டும். தான் வாழ்கின்ற சமுதாய முன்னேற்றத்துக்கு பங்களிப்பைச் செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்தும் **சுயவளர்ச்சி, சுயபொருளாதார மேம்பாடு, சமுதாய ஈடுபாடு** என்னும் முத்தான மூன்று கொள்கைகளைக் கொண்ட இயக்கம்.

## வசந்தவாசல்...

கொள்கைகள்
ஒன்றே
வெல்லும்
என்றே.....

தடைகளைக்
கடந்து
வாழ்க்கைப்
பயணம்!

தடம்பல
நடந்து
வைரத்தால்
நெஞ்சம்!

இமயம்
தொடும்
எதிர்கால
வெளிச்சம்!

மனப்பூவில்
தேன்சுரக்கும்
மழைச்சாரலில்
நனைக்கும்!

வறுமை ஒழித்து
வளம்சேர்க்கும்
வசந்தவாசல்
வரவேற்பளிக்கும்!

கவிஞர். கலியுகன் கோபி
சென்னை

## ஆட்சி மாற்றம்!?

பாலும் தயிரானால்
பக்குவத்தின் மாற்றம்.
பசும்தயிரும் மோரானால்
பருகநல் மாற்றம்!

தயிர்கடைந்த வெண்ணெய்யும்
தக்கதொரு மாற்றம்.
தானுருக வெண்ணெய்யும்
தரும்நெய் மாற்றம்!

பாலும் புளித்ததென்றால்...
பதமில்லா மாற்றம்.
பானையிலது திரிந்திடுதல்
பயன்தருமா மாற்றம்?

தீய்ந்ததுவும் காய்ந்திடுதல்....
தீமையான மாற்றம்!
தேர்ந்தெடுத்தார் மக்களும்தான்
தெளிவில்லா மாற்றம்!

மரு. த.இராசலிங்கம்.

### தலைமை குறித்த எனது பார்வை

“தலைமை” என்பது அப்படியே எடுத்து உடுத்திக் கொள்ளும் ஆயத்த ஆடையல்ல! பருத்தி பஞ்சாகி, பஞ்சு நூலாகி, நூல் துணியாகி, துணி ஆடையாக வடிவெடுப்பதே தலைமையாகும்!